| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கோபாலன் | நாள் | 21.10.2021 |
| தகப்பனார் பெயர் | காளியப்பன் | | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

காவல்நிலையத்தில் புகார் அளித்ததற்கான புகார் மனுவை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எந்த தேதி புகார் அளித்தேன் என்றால் தெரியாது. என்னுடைய தகப்பனார் 1985 ல் இறந்துவிட்டார். நானும், என்னுடைய அண்ணனும் என்னுடைய தகப்பனாரின் இறப்புசான்றிதழை வைத்து தான் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்தோம் என்றால் ஆமாம். துரைசாமி மற்றும் என்னுடைய பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அனைத்து வாரிசுதாரர்களையும் சேர்க்காமல் எங்கள் இரண்டு பேருக்கு மட்டும் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பட்டா எங்கள் இருவர் பெயரிலும் உள்ளது தெரியும் என்றால் ஆமாம். எங்கள் இருவர் பெயரில் உள்ளது தெரிந்தும், எதற்காக மற்ற பிரதிவாதிகளையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் நானும், என்னுடைய தகப்பனாரும் அவர்களுக்கு எதுவும் கொடுக்கவில்லை. ஆகவே சேர்த்துள்ளேன். எங்கள் இருவர் பெயரை நீக்கி காளியப்பனின் வாரிசுகளை சேர்க்க மனு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எங்கள் இருவர் பெயரில் மட்டும் தான் பட்டா உள்ளது என வழக்கில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். பட்டா எண்.97 பத்து நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என கூறவில்லை என்றால் ஆமாம். கூட்டுப்பட்டாவில் மொத்தம் எவ்வளவு உள்ளது என்றால் 2 ஏக்கர் 65 சென்ட் உள்ளது. அவர்களுக்கு 12 1/4 சென்ட் உள்ளது. கூட்டுப்பட்டாவில் என்ன சர்வே எண் போடப்பட்டுள்ளது என்றால் 848 என போடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 848/1ஏ என கண்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்துவிபரத்தில் சர்வே எண்.848/1ஏ என குறிப்பிடவில்லை என்றால் தகப்பனாரின் சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்தேன். பட்டாவின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட சங்கதிகளை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் பெயரில் தனிப்பட்டா இல்லை என்றால் ஆமாம். கிரையத்திற்கு பின்னிட்டு என்னுடைய தகப்பனார் பட்டா பெறவில்லை என்றாலும் ஆமாம். என்னுடைய தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு எப்போது பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தோம்

என்றால் 6 வருடங்கள் கழித்து கொடுத்தோம். என்னுடைய தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு பட்டா மாறுதலுக்கு நாங்கள் இருவரும் மட்டும் முயற்சி செய்ததால் வழக்குரையிலோ, முதல்விசாரணையிலோ கூறவில்லை என்றால் ஆமாம். எதன் அடிப்படையில் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேன் என்றால் பத்திரத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்து பட்டா மாறுதலுக்கு மனு செய்தேன். இடத்தை பார்வையிட்டு அளந்ததற்கு பின்னிட்டு தான் பட்டா கொடுத்தார்கள் என்றால் இடத்தை பார்க்கவில்லை. ஏற்கனவே உள்ள பட்டாதாரர்களை விசாரணைக்கு அழைக்கவில்லை என்றால் ஆமாம். அளக்காமல் பட்டா வழங்கியுள்ளதற்கு வட்டாட்சியரிடமோ, ஆர்டிஓ–விடமோ புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. அளக்காமல் பட்டா கொடுத்ததற்கு மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது தவறு எனவும், சரியான முறையில் தான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் கூறியுள்ள அளவு இல்லை என்றால் சரியல்ல. பட்டா தவறு என்றால் காளியப்பன் இறந்த உடனேயே தனிப்பட்டா தான் கேட்டிருப்போம் என்றால் சரியல்ல. தனிப்பட்டா கோரி தற்போதுவரை எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என்னுடைய சத்தியப்பிரமாண வாக்குமூலம் பக்கம் 4 பத்தி 6–ல் கூறியுள்ள 14 3/4 சென்ட் நிலத்தில் வழக்கிற்கு முன்பே பிரதிவாதிகள் மற்றும் சிலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சாட்சி தற்போது வழக்கிற்கு பின்னிட்டு வீடு கட்ட ஆரம்பித்ததாக சாட்சியம் அளிக்கிறார். எந்த தேதியில் அவ்வாறு வீடு கட்ட ஆரம்பித்ததாக கூறுகிறேன் என்றால் தேதி தெரியாது. 2014 ம் வருடம். நான் கூறுவது தவறு எனவும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்டனர் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மற்றும் சிலர் என கூறியுள்ளதில் அந்த சிலர் யார் என்பது எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை எள்றால் அவர்கள் இடையூறு செய்யவில்லை. 14 3/4 சென்ட்–ல் பிரதிவாதிகளை தவிர மற்ற நபர்கள் யார் யார் என்றால் செல்வம், சாரதா ஆகியோர் குடியுள்ளனர். 1, 2 பிரதிவாதிகள் 9 சென்டில் உள்ளனர். செல்வம், சாரதா 3, 4 சென்டில் உள்ளனர். 1, 2 பிரதிவாதிகள் 9 சென்டில் உள்ளதாக கூறுவது எனக்கு அளந்தது பார்த்ததன் அடிப்படையில் தெரியுமா என்றால் அளந்ததற்கு பின்பு தான் தெரியும். வழக்கிற்கு முன்பே எனக்கு தெரியும் எனவும், மாரியப்பனின் தகப்பனார் காலத்திலிருந்தே சாலை இருந்தது என்றால்

சரியல்ல. சர்வே எண்.848/1 ஏ–க்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் 9 சென்டில் 1, 2 பிரதிவாதிகள் உள்ளதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய நிலத்திற்கு அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆணையாளர் அறிக்கையை படித்து பார்த்தேன். அதில் 28 சென்ட் குடியிருப்பு பகுதி என கூறியுள்ளது தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையாளர் வரைபடத்தில் நிர்மலா வீடு மற்றும் சில வீடுகளை குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம். ஆணையாளர் அறிக்கைக்கு 1, 2 பிரதிவாதிகள் என்ன ஆட்சேபணை செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆணையாளர் அறிக்கையுடன், சர்வேயர் வரைபடம் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். நீ.ம.சா.ஆ.3 ல் ஆரஞ்சு வர்ணத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆதி திராவிடர் நத்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பகுதியில் தான் 1, 2 பிரதிவாதிகள் குடியிருக்கின்றனர் என்றால் அந்த நத்தத்தில் ராமலிங்கம், மாதம்மாள், கனகா, சின்னுசாமி, குப்பன், குள்ளம்மாள், பாப்பாத்தி, ஆறுமுகம் ஆகியோர் குடியிருக்கின்றனர். அதற்கு அடுத்து உள்ள என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்ததற்கு பின்னிட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை எனவும், 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் காலத்திலிருந்தே அனுபவித்து வருவது எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவேண்டிய அவசியம் இல்லை எனவும், விலை கொடுத்து வாங்கியதால் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்தை வாங்கியதாக கூறுவதால் விலை கொடுத்து வாங்கியது தெரியாது என கூறுகிறேன். என்னுடைய நிலத்தை வாங்கவில்லை எனவும், அம்புரோஸ் என்பவர் நிலத்தை பிரதிவாதிகள் வாங்கியுள்ளனர் என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.2 மற்றும் 3 ல் கூறியுள்ள பச்சை நிற பகுதியில் குறிப்பிட்டுள்ள நிலத்தை தான் என்னுடைய தகப்பனார் வாங்கினார் எனவும், அந்த பகுதியில் மட்டும் தான் நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் கீழே இருக்கும் நத்தம் நிலத்தில் என்னுடைய தகப்பனார் தான் குடி வைத்தார். என்னுடைய தகப்பனார் பச்சை நிற பகுதியில் உள்ளதை மட்டும் தான் அனுபவித்தார் எனவும், நானும் அதை மட்டும் தான் அனுபவித்து வருகிறேன் எனவும், பத்திரத்தில் மட்டும் 2 1/2 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார்

தோராயமாக அளக்காமல் வாங்கியுள்ளார் எனவும், அதனால் தான் வாங்கிய அளவை விட கூடுதலான அளவிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் பழைய சர்வே எண்.793/பி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.793/பி என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள அ.வ.எண்.149/68 வழக்கின் நகல்களை வாங்கி பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனாரும் தீர்ப்பு நகல்களை வாங்கி பார்த்தாரா, இல்லையா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டாவது அதன் நகல்களை வாங்கி பார்க்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. எந்த வருடம் உட்பிரிவு செய்தார்கள் என்பது வழக்கிற்கு பின்னிட்டாவது ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கூட்டுப்பட்டாவில் உள்ள நபர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். நீ.ம.சா.ஆ.3–ல் 848 என்பது 848/1ஏ,1பி,1சி என உட்பிரிவு செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் ஆமாம். 848/1பி, 1சி பற்றியும் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் தெரிந்து கொள்ளவில்லை. சர்வே எண்.848–ல் மொத்தம் எத்தனை ஏக்கர் இருந்தது என்றால் 5ஏக்கர் 62 சென்ட் இருந்தது. அதில் 1ஏ, 1பி, 1சி–க்கு யார் யாருக்கு எத்தனை நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அவ்வாறு உட்பிரிவு செய்தது வழக்கு தாக்கல் செய்யும் போது தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய நிலத்திற்கு தெற்கே சண்முகம் உள்ளார். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. 848/1ஏ, 1பி, 1சி என நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் கூறியுள்ளதற்கு பின்னிட்டு வழக்கை திருத்த நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. சண்முகத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் வழக்குரையில் கூறியுள்ளது போல் நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். நான் தான் 1, 2 பிரதிவாதிகளின் சட்டப்படியான சுவாதீனத்தை இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய்த்துறையினரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். எவ்வித சம்பவமும் நான் கூறுவதுபோல் நடைபெறவில்லை என்பதால் வழக்குமூலம்

கற்பனையானது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் தவறான சர்வே எண் குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளதால் எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நிர்மலாவும், 1, 2 பிரதிவாதிகளும் உள்ளதாக கூறிவிட்டு நிர்மலாவும் மற்ற நபர்களும் வேண்டிய நபர்கள் என்பதால் அவர்களை சேர்க்காமல் விட்டுவிட்டு 1, 2 பிரதிவாதிகளை மட்டும் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு பட்டா மாறுதலுக்கு மனு செய்துவிட்டு தற்போது அதிகமாக உள்ளது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் இரண்டு பெயரில் மட்டும் உள்ள நிலையில் காளியப்பனின் வாரிசுகளையும் துர்லாபம் அடைவதற்காக சேர்த்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பட்டா மாறுதலுக்கு பின்பு வாங்கப்பட்ட வரி ரசீது என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் பெயரிலுள்ள வரிரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அவர் வரி செலுத்தவில்லை என்றால் செலுத்தியுள்ளார். வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/--எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.